


# பரலோக பொக்கிஷங்கள்

**ஆவியானவர் நம்மீது தங்குவார்!** [யோவான் 1:33]



## கிறிஸ்து வழங்கிய 'சுதந்திர முரசொலி!'

சுதந்திர நற்செய்தியை கேளுங்கள்: "நம்மை இப்போதிருக்கிற பொல்லாத உலகத்திலிருந்து விடுவித்து சுதந்திரம் தந்திட" கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படி, நம்முடைய பாவங்களுக்காக 'தம்மை தாமே' ஒப்புக்கொடுத்தார்! (கலா.1:4). நான் பெற்ற சுதந்திரம், என் இஷ்டப்படி வாழ்வதற்கு அல்ல.... எனக்கு சுதந்திரம் அருளித்தந்த 'கிறிஸ்து நாதருக்கே' என்னை அடிமையாக்கிக்கொண்டேன் எனவும், பவுல் கெம்பீரித்தார் (கலா.1:10). ஆம், பாவ சங்கிலியோ, பாரம்பரிய சங்கிலியோ, சுயத்தின் சங்கிலியோ, எந்த மனுஷீக ஆளுகை சங்கிலியோ, இனி நம்மை அடிமைப்படுத்த முடியாது!

'இனி அடிமை இல்லை' நம் சுதந்திர முரசொலி! -tr

பெட்டகம் 42
ஆகஸ்ட் 2026 பரல்கள் 08



## 'ஒத்தவேஷம் மறுக்கும்' சபையே, வலிமை நிறைந்தது!

தேவனிடத்தில் சொல்லிமுடியா அன்பு கொண்டு வாழும் ஒவ்வொரு சபைக்கும், ஆண்டவர் துணிவான அழைப்பை தயக்கமின்றி தருகிறார்.... "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்!..... அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொள்வேன்" என்றே கர்த்தர் சொல்லுகிறார்!! (2கொரி6:17). இவ்வித நேரடி அழைப்பை நெஞ்சார கேட்ட சபைகள் மாத்திரமே, தாங்கள் வாழும் இந்த கொடிய உலகிற்கு சமரசம் மறுத்து, வாழ்வதினிமித்தம் ஏற்படும் வலிமையான அனுபவங்களை சபையில் கண்டு மகிழ்வார்கள்!

ஒரு தூய சபை, உலகத்திற்கு ஒத்தவேஷம் மறுத்து எவ்வளவு முரணாக எழுந்து நிற்கிறதோ, அதைக் கொண்டே அந்த சபையின் வலிமையை கணக்கிட முடியும்! 'சத்தியத்தின் உறுதிக்கு' துயரம் ஏற்படும் என்பது, வேதத்தில் மிகத் தெளிவாகவே இருக்கிறது! சபை சரித்திரத்திலும் திருஷ்டாந்தமாய் இருக்கிறது! ஆனால், அந்த உத்தம திருஷ்டாந்தத்தைப் பின்தொடர்ந்து வரும் சபைகளைத்தான் இன்று காண அரிதாய் இருக்கிறது!

*-Ed*

**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஆகஸ்ட் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A - Zaheer Hussain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

**சூழ்நிலைகள், நம்மை உயர நடத்தும் தேவ ரதங்கள்!**

*மனமடிவு, நம்மை நசுக்கும் சிறிய தேர் சக்கரங்கள்*

**ஜீ**வ வழியில் நடந்துவரும் ஒரு கிறிஸ்தவனுடைய ஜெபம், எப்போதுமே *எலிசா* வேண்டிக்கொண்ட விண்ணப்பத்தைப் போலவே "கர்த்தாவே, நான் காணும்படி என் கண்களை திறந்தருளும்" *(2இராஜா 6:17)* என்பதாகவே எப்போதும் இருந்திட வேண்டும். அதுஏனென்றால்,

> "அன்று எலிசாவை சூழ்ந்திருந்து அவனை அழிக்க வந்த "இராணுவமும், குதிரைகளும், இரதங்களும் போலவே" **நம்மைச் சுற்றியுள்ள உலகம் எப்போதும் இருக்கிறது!**

*எலிசாவின் வேலைக்காரன் கண்கள் திறக்கப்படாதிருந்ததால்* "**கர்த்தாவே இவன் கண்களை திறந்தருளும்**" *என எலிசா* ஜெபித்தார். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரனின் கண்களைத் திறந்தபடியால் "இதோ எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளும் இரதங்களும்" தங்களைச் சூழ்ந்து நிறைந்திருப்பதை அந்த வேலைக்காரன் கண்டான்! (வச.17).

எலிசாவின் இந்த ஜெபமே நம்முடைய ஜெபமாய் மாற வேண்டும். இவ்வுலகத்திலுள்ள எவ்வளவு பெரிய கொடிய சூழ்நிலையானாலும், நம்மை ஏந்திச் செல்வதற்கு ஆயத்தமாக தேவனுடைய இரதங்கள் நமக்காக காத்திருக்கின்றன! 'தேவனுடைய இரதம்' மெய்யாகவே "நம்மை மகிமையான ஜெயத்தின் ஸ்தலத்திற்குள்" நம்மை நிச்சயம் ஏந்திச் சென்றுவிடும்.

*உங்கள் வாழ்வின் சூழ்நிலை பெரியதோ சிறியதோ! இன்பமோ துன்பமோ! ஆகிய அனைத்து சூழ்நிலைகளிலும் நம் ஆத்துமாவை மேல்நோக்கி எடுத்துச் செல்வதற்கு 'தேவனுடைய இரதம்' காத்திருப்பதை நிச்சயமாய் நம் கண்கள் கண்டுவிடும். ஆம், நம்மை அணுகும் ஒவ்வொரு துயர சூழ்நிலையும், "பறந்து செல்லும் தேவனுடைய இரதத்தின் நிகழ்ச்சிக்கே" நம்மை நடத்துகிறது! ஆனால், நம் மனக்கண்கள் திறக்கப்பட்டால் மாத்திரமே 'இந்த மாபெரும்*

*அற்புதம்' பாரபட்சம் இல்லாமல் எல்லோருக்கும் நடந்தேறும். அது எலிசாவைப் போன்ற கர்த்தருடைய ஊழியரானாலும் அல்லது அவரோடிருந்த வேலைக்காரனாயிருந்தாலும், எவ்வித பாரபட்சமின்றி 'தேவனுடைய இரதம் ஏறும்' அற்புதம் அவர்களுக்கு நடைபெறும்.*

ஆனால் மேற்கண்டபடி, நம் மனக்கண்கள் திறக்கப்படாத பட்சத்தில், ஒரு சிறிய துன்பம் ஏற்பட்டாலும், ஒரு மண் ரோட்டில் ஓடும் ஒரு சிறிய தேர் வண்டிகூட, நம்முடைய துன்பத்தில் நசுங்கிப் போகச் செய்துவிடும். **நீங்கள் தெரிந்து கொள்ளப்போவது எது?** என்பதைச் சார்ந்தே இவை எல்லாம் சம்பவிக்கிறது. நம்மைச் சூழ வரும் துன்ப சூழ்நிலை எவ்வளவு சிறிது, எவ்வளவு பெரிது, என்பது ஒரு பொருட்டல்ல. அவை அனைத்தும் "நம் மன கண்கள் பிரகாசத்தை சார்ந்தே" இருக்கிறது! நீங்கள் மன மடிந்தவர்களாய் வீழும்போது, அந்த சூழ்நிலை மண் வீதியில் ஓடும் ஒரு சிறிய தேராய் மாறி, உங்கள் மீது உருண்டு உங்களை நசுக்கிப்போட்டுவிடும். இதற்கு நேர் எதிராக, ஒருவன் விசுவாச கண்களோடு, தன் பாதங்களை மேல்நோக்கி ஏறுவதற்கு ஆயத்தமாகிவிட்டால், அதுவே தேவன் ஏற்படுத்திய "வெற்றியின் இரதமாய்" மாறிவிடும். அந்த இரதம், தேவனுடைய இரதம்! அது அவனை ஜெயமாய் தாங்கிக்கொண்டு மேல்நோக்கி உயர உயர நடத்திச் செல்லும்!

நாம் எச்சரிக்கையாய் அறிய வேண்டியது என்னவென்றால் 'நசுங்கி போய்விட்ட ஆத்துமாவை கொண்டு' தேவனால் எதுவும் செய்ய இயலாது! ஆகவேதான்,

> **"பொல்லாத தந்திரமாகிய பிசாசு கர்த்தருடைய ஜனங்களை அவர்களது சூழ்நிலையை முன்வைத்து மனச்சோர்வடைய பிரயாசப்படுகிறான்.**

அதைப்போலவே தேவனுடைய சபைக்குரிய காரியத்திலும் சம்பவிக்கிறது. பொதுவான ஒரு பழமொழி என்னவென்றால் "படைக்கு முன் செல்லும் ஒரு சேனை மனச்சோர்வுடையவர்களாயிருந்தால், அவர்கள் மடங்கடிக்கப்படுவது நிச்சயம்" என்பதை நாம் அறிவோமாக. சமீப காலத்தில், ஒரு மிஷனரி சகோதரியின் சோக முடிவை கேள்விப்பட்டிருக்கிறோம். தான் ஊழியம் செய்த மிஷனரி தளத்தில் 'மனச்சோர்வுக்கு ஆளாகி' அவர்களுடைய சரீரமும் நோய்வாய்ப்பட்டது. அதனிமித்தமாய் 'ஊழிய பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு' அவருடைய தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள்! சத்துருவானவன் நம் ஆவியை எந்த

விதத்திலாவது சோர்வடையும்படி தாக்குகிறான் என்பதை நாம் யாவருமே நன்கு விளங்கிக்கொள்வோமாக. இவ்வாறு விளங்கி கொண்டவர்கள் மாத்திரமே பிசாசின் தந்திர தாக்குதலை எதிர்த்து மேற்கொள்ள முடியும்! நாம் தேவனோடு கொண்டிருக்கும் அமைதியான ஸ்தானத்தை, சத்துருவானவன் அகற்றிவிட இடம் கொடுத்துவிட்டால், அடுத்த முயற்சியாக நம்மை சத்துருவானவன் எந்தப் பணியும் செய்ய முடியாத மனச்சோர்வின் கூண்டுக்குள் அடைத்துவிடுவான்! இவ்வித கூண்டுக்குள் ஒருவன் நீண்ட காலம் வாழ்ந்திட நேர்ந்தால், அதனிமித்தம் "ஜெயத்தின் மகிழ்ச்சியான கோஷம் நம்மை விட்டு வெளியே சென்றுவிடும்" என்பதை அறிந்து, விழிப்புடன் ஜீவிப்போமாக! விழிப்புடன் ஊழியம் செய்வோமாக!

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

---

## நான் பெற்ற ஜெய ஜீவியம் கர்த்தரால் வந்தது!

*என் வீழ்ச்சியே, கர்த்தரின் ஜெயத்தை நிரூபித்தது*

தேவன் நம்மை அழைத்தபோது நாம் எப்பேற்பட்ட இழி பிறவி என்பதை அறிவார்! நாம் எளிதாய் தைரியத்தையும், விசுவாசத்தையும் இழந்து விடுவோம் என்பதையும் நன்றாய் அறிவார்! இத்தோடு முற்றுப்புள்ளி அல்ல, கேளுங்கள்..... நம்மை விசுவாசத்தில் பெலப்படுத்த, தான் வல்லமை பொருந்தியவர் என்பதையும் தேவன் நன்றாய் அறிவார்!

ஆம், தேவனும், அவருடைய வார்த்தைகளும் நம்முடைய பெலவீனத்தைக் கணக்கில் வைத்திருக்கிறார்கள். மனுஷீகப் பிரகாரமாய், என்னால் எப்படி இலக்கை (Goal) அடைய முடியும்? எனத் தோன்றினாலும்:

**"நான் கொஞ்சமும் நம்பிக்கையில் அசைக்கப்படாமல்" தேவ வசனத்தை இறுகப்பற்றிக் கொள்வேன், நான் இலக்கை அடைந்தே தீருவேன்!**

வேதத்தில் புத்திமதிகள் காரணமில்லாமல் ஏனோதானோ என்று கூறப்படுவதில்லை! உங்கள் நம்பிக்கை அசைக்கப்படாதபடி இறுகப்பற்றிக் கொள்ளுங்கள் என ஏன் இவ்வளவு ஆணித்தரமாய் புத்தி சொல்லப்படுகிறோம்? ஏனெனில் தேவன் நம்மை அழைத்த நோக்கமாகிய மகா பெரியதும், **மகிமையுமான கிரியையை அவரே நம்மில் செய்து முடிப்பதற்காகவே** அப்படி புத்தி கூறியுள்ளார்.

சரியாய் சொல்ல வேண்டுமென்றால், இது ஓர் நம்பவே முடியாத மேன்மையாகும்! நாம் பிசாசின் வலையாகிய பெருமையில்

*சிக்கிக் கொள்ளாமலும், மேட்டிமை அடைந்திடாமலும் தாங்கிக் கொள்வதற்காகவே, நாம் உண்மையாய் "முகங்குப்புற வீழ்வது" அவசியமாயிருக்கிறது. ஆம், ஆரம்பத்தில் நமக்குத் தோல்வியே கிட்டுவது தேவனுடைய நிச்சயமான, நியமிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாகும்! அப்போதுதான் நாம் முற்றிலும் தாழ்த்தப்பட்டு, நம் ஒவ்வொருவருக்கும் தேவன் தரவிரும்பும், தன் சொல்லொண்ணா தேவ கிருபையை! மகிமையை! நம் ஆத்துமாவிற்கு எவ்வித 'அகந்தையான' சேதமுமில்லாமல் தாழ்மையுடன் தாங்கிப் பெற்றுக்கொள்ள முடியும்!* **இதுவே நம்முடைய சுவிசேஷத்தின் நம்பிக்கை!**

*எனக்காக, தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். என் தேவன் செய்திருக்கும் மாபெரும் அற்புதமான கிரியைகளை, அந்த ஜெயத்தை பேசுவதால் எனக்குள்ளிருந்து பெருமை சிறிதேனும் கொண்டு எழவில்லை! கர்த்தரே ஜெயம் தந்தார்! என ஆர்ப்பரித்து, சாட்சி கூறி மகிழ்கிறேன்!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'முழு இருதயமும் இயேசு' என இருப்பது, வெற்றியுள்ள ஜீவியம்!

*கொடுத்துவிட்ட இருதயத்தை மீண்டும் வாங்குவது தவறு*

**பா***ய் விரித்து ஓடுவது, கப்பலுக்கு அலங்காரம்! ஆராதனை மகிழ்வுடன் நடந்துவருவது, ஆலயத்திற்கு அலங்காரம்! மனுஷன் தேவனைத் தேடும்படி, தேவசபைக்கு வாஞ்சையுடன் செல்வது,* **அவனுக்கே அது அலங்காரம்!** *எதெது என்னென்ன நோக்கத்திற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்த நோக்கம் அவைகளில் நிறைவேறும்போதுதான், அவைகள் அலங்காரமும் மகிமையுமாய் காணப்படும்!*

*மனுஷனைத் தாம் வாசஞ்செய்யும் ஆலயமாக தேவன் உண்டாக்கினார். ஆகவே, தேவன் அவனுக்குள் வசிப்பதே அவனுக்கு மகிமையும் ஆசீர்வாதமுமாயிருக்கும்! ஆனால் மனுஷனோ, தேவனை புறக்கணித்துச் சாத்தானைத் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டான்! வஞ்சகமாய் உட்பிரவேசித்த சாத்தான் 'இது என் வீடு' என்றும் சொல்லிக் கொள்ளுகிறான்! வீட்டுக்கு எஜமானாகிய தேவனோ "மகனே உன் இருதயத்தை எனக்குத் தா" என்கிறார். எல்லாவற்றையும் மனுஷனுக்கு கொடுத்துவருகிற தேவன், அவனிடத்தில் விரும்பிக் கேட்பது, நம் இருதயம் ஒன்றுதான்!*

***அ****நேகக் காரியங்களை தேவனுக்கு கொடுக்கச் சித்தமாயிருக்கிற மனுஷன், அவருக்குக் 'கொடுத்ததை விற்பது' அவனுடைய இருதயம் மாத்திரமே! ஆ, இது பிசாசின் தந்திரம்.*

*உங்கள் 'இருதயம் மாத்திரம்' கர்த்தருக்கு சம்பூரண மகிழ்வுடன் கொடுக்கப்பட்டால், மனுஷன் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கப்படுவான்! என்ற உண்மையை அறிந்த சாத்தான், நம்முடைய இருதயங்களை தேவனுக்குப் பூரணமாய் கொடுத்து விடாதபடிக்கு, எவ்வளவோ தடைசெய்கிறான்!*

> **"யோசேப்பு பலவந்தமாய் சோதிக்கப்பட்டபோதிலும், அவன் சற்றும் இணங்காமல் அச்சோதனையை ஜெயித்தது எதினாலே? அவனுடைய இருதயம் கர்த்தரோடு சரியாயிருந்ததினாலல்லவா?**

*அதுவே, கர்த்தர் யோசேப்போடுகூட இருக்கிறார் என்று மற்றவர்கள் பிரத்தியட்சமாய் கண்டுகொள்ளக் கூடியதாயிருந்தது! யூதாஸை எவ்வளவாய் ஆண்டவர் எச்சரித்தபோதிலும், பொருளாசை அவனுக்கு கண்ணியாயிற்று! ஆனால், பேதுருவைச் சோதிக்கும்படி பொருள் நீட்டப்பட்டபோதோ "உன் பணம் உன்னோடுகூட நாசமாய் போகக்கடவது" என்று எறிந்துவிட்டார்! ஒரு சீஷனுக்கு கண்ணியாக மாறிவிட்ட பணம், இன்னொரு சீஷனை மேற்கொள்ள முடியாமல் போனதென்ன? அவ்விருவருடைய இருதயத்தின் தன்மையிலேயே அந்த வித்தியாசமிருக்கிறது!*

> **"இருதயத்தை பணத்தின்மீது வைத்துக்கொண்டு, சபையில் ஒரு கிறிஸ்தவன் வாழ்வது எவ்வளவு மதியீனம்!**

***மே**லும், இருவர் சேர்ந்து ஒரு வழியே போகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். சற்று தூரம் போனபின், ஆ! எவ்வளவு இனிமையான 'தேவ இராகம்' என்கிறான் ஒருவன்! மற்றவனோ, 'எங்கே இராகம்?' என்று கேட்கிறான். வழியில் தொனித்த இராகம் ஒருவன் செவியில் விழுந்ததென்ன? மற்றவன் செவியில் விழாமற் போனதென்ன? ஒருவன் இயேசுவின் பாடலை ரசித்திடும் இருதயம் கொண்டவன்! மற்றவனிடத்திலோ, அந்த உயர்ந்த இருதயம் இல்லை! இப்படியே அநேகக் காரியங்கள் இருக்கிறது!*

*புறம்பான சோதனைகளால் நாம் இழுப்புண்டு போகாதிருக்க வேண்டுமானால், உள்ளான நம்முடைய இருதயம் கர்த்தரோடு சரியாயிருக்க வேண்டியது அவசியம்! இயேசுவானவர், எவ்வளவாய் சோதிக்கப்பட்ட போதிலும் பாவஞ்செய்யவில்லை. "இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்றார். ஏனெனில், அவருடைய இருதயம் பிதாவுக்கு முற்றிலும் கொடுக்கப் பட்டிருந்தது. ஆகவேதான்,* **"என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதா"**

*என்றார். புறம்பான காரியங்களைக் கொண்டு அவரைப் பாவஞ் செய்யப்பண்ணுகிறதற்கு, இப்போது "அவருடைய இருதயத்தில் தகாத ஆசைகள்" எதுவும் வாசமாய் இல்லையே!*

*நம்முடைய வீட்டில், ஒரு அறையை வேறொருவனுக்குக் குடி யிருக்கக் கொடுத்தால், அவன் தாராளமாய் வரப்போக இருப்பானல்லவா? நம்முடைய இருதயம் கர்த்தருக்கு உண்மை யாகவே கொடுக்கப்பட்டு* **அவர் அங்கே வசிப்பாரானால்,** *சாத்தான் நம்மிடத்தில் வந்தாலும் அவனுக்கு இடமில்லை என்பதை, அவனே அறிந்துகொள்ளுவான்! நாம் இணங்காமற்போனால், எந்த சோதனையும் நம்மை மேற்கொள்ளுவதில்லை! ஆம், இருதயத்தை ஆண்டவருக்கே கொடுத்து வாழுங்கள்! ஜெயித்து வாழுங்கள்! ஆமென்.*

*- S.பரமானந்தம்*

---

## "சபை, நேசரின் மணவாட்டி!" என்ற மகிழ்ச்சி நமக்கு வேண்டும்!

*சபை மீது கிறிஸ்து கொண்ட மணவாள அன்பு அதிசயமானது*

**கி***றிஸ்து தன் சபையின்மீது எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறார் என நாம் அனைவருமே கூர்ந்து பார்ப்பது நலம். இந்த பூமியில், எதைக் காட்டிலும் மேலாக, உயர்ந்த இடத்தில் கிறிஸ்து தன் சபையை உயர்த்தி வைத்துள்ளார்! ஆகிலும், தன் மணவாட்டியின் பாவத்தை உடனடியாக கடிந்துகொள்ள அவர் தயங்குவதில்லை! "நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களை கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" என்றே கர்த்தர் கூறியுள்ளார்! (வெளி 3:19). உலகத்தாரிடம் காணப்படும் தீமை களை 'பகிரங்க மீறுதல்' எனக்காண்பார். ஆனால், தன் மணவாளியின் தடுமாற்றங்களை "கிறிஸ்துவின் அன்பிற்கும், கிருபைக்கும்" விரோதமான பாவமாகவே கர்த்தர் காண்பார்!*

> **"கிறிஸ்துவின் மணவாட்டி தன்னை சோதித்தறியும் போது 'தான் கறுப்பாய் இருப்பதை' கண்டாள். அப்படியிருக்க, 'சர்வ வல்ல கர்த்தரின் கண்களுக்கு முன்பாக' அவள் இன்னுமதிகமான கறுப்பாக இருப்பாளன்றோ!**

***இ****ங்குதான் ஒரு ஆச்சரியமான, அதேசமயம் பரிசுத்தாவியின் பரவசத்தோடு மணவாளன் தன் சொந்த உதட்டினால் கூறிய அருமையான வாசகம் வெளிப்படுகிறது: "என் பிரியமே! நீ பூரண அழகுள்ளவள்! உன்னிடத்தில் ஒரு பழுதும் இல்லை". இவ்வாறு மணவாளன் கூறியது எப்படி சாத்தியம்? இது என்ன, மணவாளனின் அன்பினுடைய மிகைப்படுத்தலா? அல்லது அவள்மீது கொண்ட*

*பரவசத்தின் முகஸ்துதியா? அல்லது சத்தியவானாக கருதப்பட்ட மணவாள நேசரின் கட்டுக்கதையா? இல்லை, நிச்சயமாய் இல்லை!*

*ராஜா, பூரண அன்புடையவர்தான்! ஆகிலும், தன் மணவாளியைக் குறித்த அன்பினிமித்தம், அவளுடைய குறைபாடுகளைக் காணாதவர் அல்ல! முந்தின பாராவில், மணவாளன் கூறிய அனைத்து வாசகங்களும் உண்மையானதுதான்! இப்போது நாம் புரிந்துகொள்ளும்படி மணவாளன் விரும்புவது என்னவென்றால், அவர் தனக்குப் பிரியமான மணவாளியை எல்லாவிதத்திலும் பொறுமையோடு சோதித்துப் பார்த்து 'பாரபட்சமற்ற தீர்ப்பாகவே' அந்த இனிய வார்த்தைகளைக் கூறினார். மணவாட்டியாகிய தன் சபை எந்த விதத்திலும் 'குறைவுபட்டு போகாதபடி இருந்திடவே' அவர் விரும்புகிறார். அதே சமயத்தில், அவர் தன் மணவாட்டியைக் குறித்து வெளிப்படுத்திய பிரகாசமான வாக்குகளை "மேன்மை கொண்ட பொன்னான வாக்குகளாய்" நாம் மதிப்பீடு செய்ய வேண்டுமென்றே விரும்புகிறார்!*

> **"**
> ***ஆகவே, "மணவாளன் நம்மைக் குறித்து கூறிய அத்தனை புகழாரத்திலும் எந்த தவறுமில்லை" என்பதை நாம் உணர விரும்புகிறார்! அது, மணவாளியாகிய சபைக்கு கிடைத்த மாபெரும் சிலாக்கியம்!***

*மெய்யாகவே, யாரெல்லாம் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டியாக நியமித்து அவருடைய சபையில் வாழுகிறார்களோ, அவர்கள் அனைவருக்குமே "என் பிரியமே, நீ பூரண அழகுள்ளவள்" என மணவாளன் கூறியது உண்மையேயாகும்! அதை அவர் உணர்ச்சிவசப்பட்டு பேசாமல், தன் வாக்குகளை அவரே உறுதி படுத்தும்படி "உன்னிடத்தில் ஒரு குறையும் இல்லை!" என அவர் கூறியது, நம் உள்ளத்தை பரவசப்படுத்தும் சத்தியமாய் மாறக்கடவது!*

*இவ்வளவு மன விசாலமாய் மணவாளனாகிய கிறிஸ்து, மணவாளி யாகிய தன் சபைக்குப் பேசும்போது, "நீ அழகுள்ளவள்" என மாத்திர மல்ல "நீ பூரண அழகுள்ளவள்" எனக்கூறும் விந்தையைக் கண்டீர்களா! அதற்குரிய முக்கிய காரண ரகசியம் என்னவென்றால்:*

1. *தன் மணவாளியாகிய சபையை "தனக்குள் வைத்தே" காண்கிறார்!*
2. *பாவம் நீக்கும் தன் சொந்த இரத்தத்தினால் கழுவப்பட்டவளாய் காண்கிறார்!*
3. *'அவருடைய தகுதிக்கு ஒப்பான நீதியை' உடுத்தியவளாய், தன் மணவாளியை பார்க்கிறார்!*

4. சபையை முழுநேசம் கொண்டவளாயும்! சௌந்தரியம் உடையவளாயும் காண்கிறார்!

5. மணவாளியாகிய சபையை கிறிஸ்து "தனக்கு சொந்தமாய்" ஆக்கிக் கொண்டபடியால், அவளுடைய பூரண சிநேகத்தை, கிறிஸ்து போற்றி புகழ்ந்ததில் எந்த ஆச்சரியமுமில்லை!

6. அவரது மணவாட்டி சபையின் பரிசுத்தம்! மகிமை! பூரணம்! ஆகிய அனைத்தும் கிறிஸ்துவுக்குச் சொந்தமான ஆடைகள்! அதை அவருடைய மணவாட்டியாகிய சபை நேர்த்தியாக உடுத்தி வருவதை காணவே ஆர்வமுடன் காத்திருக்கிறார்!

இவை அனைத்தும் கிறிஸ்து ஏன் சபையை அவ்வளவாய் நேசித்தார்? என்பதற்குரிய இரகசியங்களாய் இருக்கிறது! கிறிஸ்து உறவாடத் தகுதியான அனைத்து விருப்பங்களும் அவளிடமிருந்தது! இத்தகைய மாசற்ற தகுதியை அடிப்படையாகக் கொண்டே, அவளுடைய குறைபாடுகளை, பெலஹீனமான அவள் அறியாத சில பாவங்களைக்கூட முற்றிலும் தம் அன்பினால் அகற்றிவிட்டார். மணவாளனாகிய தன் ஆண்டவரிடமிருந்து "அவருடைய தகுதிக்கு ஒப்பான நீதியை" பெற்றுக்கொண்டபடியால், 'பூரண அழகு' அவளிடம் பரிமளித்துப் பொங்கியது.

> "
> **இவ்வாறு, மணவாளனுடைய தகுதிக்கு ஒப்பான நீதியை அவள் பெற்றுக் கொண்டபடியால், "பிரியமானவருக்குள் நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டோம்" (Accepted in the Beloved) என்ற கிறிஸ்துவின் மேன்மையான சுதந்திரத்தை, தான் தெரிந்துகொண்ட சபைக்கு வழங்கியுள்ளார்! (எபேசியர் 1:6).**

கர்த்தர் தெரிந்துகொண்ட மணவாட்டியாகிய சபை, வெறும் தோற்றத்திற்குரிய அழகு மாத்திரமல்ல, அவளோ "எல்லா ஸ்திரீகளிலும் பூரண ரூபவதியானவள்" (உன்னத.1:8) என்றே மணவாளன் போற்றினார்! அதாவது எல்லா பிரபுக்களின் மேன்மை, உலகத்தின் எல்லா அரசகுல மேன்மை, ஆகிய அனைத்தையும் கொண்டு வந்து வைத்தாலும், 'இவளுடைய பூரண அழகின் தகுதிக்கு' ஒப்பானதல்ல என்பதே சத்தியமாகும்!

*ஆம், மெய்யான சத்தியமாகவே இதைக் கேளுங்கள்: "இயேசு தனக்கென தெரிந்துகொண்ட மணவாட்டிக்குப் பதிலாக, உலகத்தின் அழகு பேரரசிகளைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் அல்லது பரலோக தூதர்களின் அழகை மாற்றாக கொண்டு வந்து கொடுத்தாலும், கிறிஸ்து அவை யாவையும் புறக்கணித்து விட்டு*

*அவரின் முதன்மையான பங்காய், அவருடைய சபையையே "ஸ்திரீகளுக்கெல்லாம் மேலான ரூபவதி!" என்றே அகமகிழ்ந்து, தன் மணவாளியைக் குறித்து அறிக்கை செய்வார்!*

இவ்வாறெல்லாம், தன் மணவாளியைக் குறித்து புகழ்ந்திட அவர் ஒருபோதும் வெட்கமடையார்! ஏனெனில் அவர் ஏற்றுக்கொண்ட பூரண மகிழ்ச்சி நிறைந்த மணவாட்டியை குறித்து எல்லா மனுஷர்களும் அறியும்படியே விரும்புகிறார். "இதோ, உற்றுப் பாருங்கள்" என்றே **உன்னதப்பாட்டு 4:1-ம் வசனம்** கூறுகிறது. மனுக்குலம் அனைத்தையும் உற்றுப்பார்க்கும்படி அழைத்து "என் மணவாட்டியைப் பாருங்கள்: அவள் பூரண ரூபவதி, அவளிடத்தில் பழுதொன்றும் இல்லை" *(உன்.4:1,7)* என்றே பகிரங்கமாய் அறிக்கை செய்கிறார்! அதுபோன்ற அறிக்கையை, இன்று பூமியில் வாழும் அவரால் தெரிந் தெடுக்கப்பட்ட மணவாட்டி சபைக்கு "தன் உறுதியான நம்பிக்கையாக, தன் மகிமையின் சிங்காசனத்திலிருந்து இன்றும் கூறிக்கொண்டு தான் இருக்கிறார்". ஆமென்!

*- C.H.ஸ்பர்ஜன்*

---

## அர்ப்பணம்! தியானம்! இதுவே ஜெயத்தின் இரகசியம்!

*ஜெயஜீவியம், பிறருக்கு சுவிசேஷம் அறிவித்திட நடத்தும்*

ஒருசமயம், ஒரு காவல் அதிகாரி என்னிடம், "கிறிஸ்தவ ஜெய வாழ்விற்கு இரகசியம் என்ன?" என்று கேட்டார். ஜெயத்தை அறிவிப்பதற்கு யாதொரு 'கடினமான வழிமுறையென' ஏதுமில்லை! என்றே நான் கூறினேன். ஆகிலும் மகிழ்ச்சியான கிறிஸ்தவ ஜெய ஜீவியத்தை விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால், "அர்ப்பண ஜீவியமே" பிரதானம்! அதோடு சேர்ந்துள்ள 'தியான வாழ்வும்' மிக முக்கியமென கூறினேன்.

கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் தினசரி தியான வாழ்க்கைக்குப் பதிலாக, வேறு எதையும் மாற்றுதலாய் வைத்திட இயலாது! மிகச் சிறந்த மிஷனெரிகளில் ஒருவரான **ஹட்சன் டெய்லர்** கூறும்போது,

*"உங்கள் ஜீவிய பாரமும், மன அழுத்தமும் எவ்வளவு அதிகம் இருந்தாலும், அந்த பாரங்கள் உங்கள் ஆளுகைக்கு கீழ்தான் இருக்கவேண்டும். அந்த மன அழுத்தங்கள் உங்களுக்கும், ஆண்டவருக்கும் இடையில் நுழைந்துவிட அனுமதிக்காதீர்கள்! மன அழுத்தங்கள் எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவு அதிகமாய் அந்த அழுத்தங்கள் கிறிஸ்துவின் இருதயத்திற்கு நேராய் உங்களை*

*உந்தித் தள்ளுவதாய் மாறட்டும்" என்றே கெம்பீரமாய் கூறினார். நமது அமைதியான தியான வேளை! நமது ஜெபவேளை! வேத வாக்கிய தியானம்! ஆகிய யாவும் நமது மகிழ்ச்சியான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு மிகுந்த அவசியமாகும். ஒரு கிறிஸ்தவன் 'தினசரி' கிறிஸ்துவோடு இசைந்து நடக்கவில்லையென்றால், மகிழ்ச்சியும், வல்லமையும், பிழையற்றதுமான கிறிஸ்தவ ஜீவியம் அவனை விட்டு தூரமாய் சென்றுவிடும்!*

இன்று, கிறிஸ்தவர்களாய் சபை கூடிவரும் சமயங்களில், அவர்களின் கிறிஸ்தவ உயர்ந்த தரம் குறைவுபட்டிருப்பதைக் காணமுடியும். அன்று நடைபெற்று வரும் கிரிக்கெட் ஸ்கோர் பற்றி தாராளமாய் பேசுவார்கள்! 'இன்றைய அரசியல்' எனவும் பேசிக்கொள்வார்கள்! ஆனால், வேதவாக்கியங்களை கோடிட்டுப் பேசுவதற்கென, அவர்களிடம் எதுவும் இருக்காது! இரட்சிக்கப்பட்ட அநேகருக்கு, தெய்வ அன்பை எடுத்துக்கூறும் யோவான் **3:16** வசனம் மாத்திரமே தெரிந்திருக்கக்கூடும். அது தவிர, வேறு பல வசனங்கள் அவர்களுக்குத் தெரியாது. இந்த உலகத்தாரைப் போலவே, இவர்களும் கூடிவரும் தருணத்தில் "தங்கள் வீடு! தங்கள் வாகனம்! வீட்டு எலக்ட்ரானிக் சாதனங்கள்...." ஆகிய காரியங்களின் நுணுக்கங்களைக்கூட அலசி, ஆராய்ந்து பேசிக்கொள்வார்கள். இவர்களின் பரிதாபம் என்னவென்றால்: "**தேவனுடைய காரியங்கள்**" **அவர்கள் மனதில் நிலைத்திருப்பதில்லை.**

ஆவிக்குரிய ரீதியில் நோய் கொண்டு, மரிக்கும் தருவாயில் தள்ளாடி, நம் வாசல் அருகில் வந்துநிற்கும் ஒருவனை, அபாய நிலையிலிருந்து அவனை மீட்டு **'கிறிஸ்துவே அவனது இரட்சகர்'** என காண்பித்திட தவறி விடுகிறார்கள்.

**"பிறருக்கு ஆத்தும உதவி வழங்கவேண்டிய ஆவிக்குரிய திறனை அநேகர் இழந்து, அதில் தரித்திரம் பீடிக்கப்பட்டு இருக்கிறார்கள்!**

ஆகவே ஒருசிலரை அவர்கள் சந்திக்கும்போது, 'சாதாரண மக்களைப்போலவே' பேசிவிட்டுப் போய்விடுகிறார்கள்! அனுதின ஜீவியத்தில், நாம் எப்போதெல்லாம் சிலரை அலுவலகத்தில் அல்லது மார்க்கெட் வளாகத்தில் சந்திக்கிறோமோ அல்லது ஒரு விழா நிகழ்ச்சியில் சந்திக்கிறோமோ, ஆகிய எல்லா தருணங்களிலும் நமது உரையாடல் தேவனைப் பற்றியதாகவே இருக்கவேண்டும்! அனேக சமயங்களில், உங்கள் சந்திப்பு, அன்றைய தினம் நீங்கள் வேதம் வாசித்து தியானித்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், உன்னத பக்தியான

*சிந்தனைகளையும், ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் பரவசமாய் இருந்திட வேண்டும்!*

*ஆகவே, உங்கள் இரட்சிப்பைக் குறித்த உறுதியை பெற்றுக் கொண்டு, நீங்கள் கிறிஸ்துவோடு 'முன்பு எடுத்த' தீர்மானங்களை உங்களின் போற்றுதலாய் வைத்துக்கொண்டு எஞ்சியுள்ள உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதையும் வெற்றிகரமாய் நடத்திவிடலாம் என நீங்கள் எண்ணிக்கொண்டது, பிழையானது ஆகும்! நீங்கள் இரட்சிக்கப்பட்ட பிறகும், ஒரு சராசரி மனுஷனாகவே இந்த உலகத்தில் ஜீவிக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் மறுபடியும், மறுபடியும் தேவனிடத்தில் திரும்பி வந்து "உங்கள் கிறிஸ்தவ அர்ப்பணத்தை" புதுப்பித்து வாழ வேண்டியது, அன்றாட ஜீவியத்தின் கடமையாகும்! உங்கள் ஜீவியத்தின் குறைபாடுகளைப் 'புதிதாய்' கண்டுபிடித்து, தேவனோடு அமர்ந்து, ஆவிக்குரிய தற்பரிசோதனை செய்திடும் அர்ப்பணமும்! தியானமும்! உங்களை விட்டு விலகாதிருப்பதாக! அதுவே ஜெயத்தின் இரகசியம், ஆமென்!*

*- பண்டிதர் பில்லி கிரஹாம் USA*

---

## 'எங்கும் சுதந்திரம்' என்பதே கிறிஸ்துவின் நற்செய்தி!

*சுயாதீன கிறிஸ்தவன், இனி அடிமை அல்ல*

*ஆங்கிலேயர்களின் அடிமைத்தளை சங்கிலிகளை முறித்து, இந்தியா விடுதலை பெற்றதே, நாம் கண்டடைந்த மாபெரும் சுதந்திரம்! அன்று எம்மாவூர் சீஷர்கள், மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவோடு சம்பாஷிக்கும்போது, மிகுந்த துக்கத்தோடு "நசரேயனாகிய இயேசு இஸ்ரவேலரை மீட்டு 'விடுதலையாக்கி' இரட்சிப்பவர் என்றே, நாங்கள் நம்பியிருந்தோம்" என்று ஆதங்கப்பட்டார்கள். ஆனால் இயேசு அவர்களுக்கு பதிலுரைத்து "கிறிஸ்து பாடுபட்டு, மகிமையில் பிரவேசித்த" மெய்யான விடுதலை சுவிசேஷத்தை, இன்னும் உங்கள் இருதயத்தில் அறியாதிருக்கிறீர்களே, மந்த இருதயமுள்ளவர்களே!" என கடிந்துகொண்டு....*

**"வெளியில் உள்ள தேசத்தின் சுதந்திரத்தை அல்ல, உங்கள் இருதயம் பூரண சுதந்திரம் அடையும்படியே கிறிஸ்து உங்களிடத்தில் வந்தார்" என கூறியவுடன்,**

*'**அ**வர்களுடைய இருதயம் அவர்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரிந்தது'. இந்த மாபெரும் சுதந்திரத்தை இயேசு தங்களுக்கு வழங்கியதை, உணர்வு பூர்வமாய் ஏற்றுக்கொண்டு, மிகுந்த*

*சந்தோஷப்பட்டு, ஆச்சரியமடைந்தார்கள்! இந்த சுதந்திர நற்செய்தியை, எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கித்திட வேண்டும்! என இயேசு தன் சீஷர்களுக்கு கட்டளையிட்டார். ஆம், இந்த சுதந்திரத்தை கலாத்தியர் 1:4-ம் வசனம் எடுத்துக்கூறும் நற்செய்தியை கேளுங்கள்: "நம்மை இப்போதிருக்கிற பொல்லாத உலகத்திலிருந்து விடுவித்து சுதந்திரம் தந்திட" கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படி, நம்முடைய பாவங்களுக்காக 'தம்மை தாமே' ஒப்புக்கொடுத்தார்! என்ற சுதந்திர நற்செய்தியை வாசிக்கிறோம். உண்மைதான், நம்மை அடிமைப்படுத்திய உலகத்திலிருந்து விடுதலையாக்குவதற்கு, ஆண்டவர் இயேசு 'தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்'. உலகத்திலிருந்து நம்மை விடுதலையாக்கிய இந்த சுதந்திரம், இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் நமக்கு சம்பாதிக்கப்பட்டது என்ற உண்மை (வச.4) நம் உள்ளத்தை பேரானந்தம் அடையச் செய்கிறது!*

ஒருமுறை, **சாதுசுந்தர்சிங்** வங்காள தேசத்தில் இருந்தபோது, அவருடைய அறைக்கு **மகாத்துமா காந்தியும், ரபீந்திரநாத் தாகூரும்** பிரவேசித்தார்கள். அந்த இரவு முழுவதும் பல காரியங்களை சாது சுந்தர்சிங்கிடம் சம்பாஷித்தப் பிறகு, மகாத்துமா காந்தி அவர்கள், சாது சுந்தர்சிங்கைப் பார்த்து "நீங்கள் மெய்யாகவே ஞானம் நிறைந்தவர்! மிக நன்றாக பேசினீர்கள்! நாங்கள் இந்திய தேசத்திற்காக பாடுபடுகிறோம், நீங்களும் எங்களோடு சேர்ந்து கொண்டால் நலமாயிருக்கும்" என வேண்டி, கேட்டுக் கொண்டார்.

*அதற்கு சாது சுந்தர்சிங் "காந்திஜீ அவர்களே, நீங்கள் செல்லும் பாதை வேறு! நீங்கள் அடைய விரும்பும் சுதந்திரமும் வேறு! நலமுண்டாகட்டும். ஆகிலும் நானோ, மேல் நோக்கிச் செல்லும் இயேசுவின் பாதைக்கு பணியாற்றும் அவரது தொண்டன். ஜனங்களை பாவ கட்டிலிருந்து விடுதலையாக்கி அவர்களை நடத்தும்படி, கிறிஸ்து இயேசுவினால் தெரிந்து கொள்ளப்பட்டவன். இந்த வேதாகமத்தை ஒவ்வொரு நாளும் கொஞ்சம் வாசித்துப் பாருங்கள். அது, உங்கள் மனதை தெளிய வைக்கும்" என கூறினார். வேதத்தை வாங்கிக் கொண்ட மகாத்துமா காந்தி, சிறிய புன்னகையுடன் வெளியே சென்றார்! இப்பொழுது நாம் புரிந்து கொள்ள வேண்டியதெல்லாம், "இந்த பிரபஞ்சத்திலிருந்து நாம் பெற்ற விடுதலை, இயேசுவின் மரணத்தினால் நமக்கு வழங்கப்பட்டது!" என்ற நற்செய்தியேயாகும்!*

'**இ**ந்த விடுதலைக்கு மாறாக' வேறொரு சுவிசேஷமாகிய

நற்செய்தி இல்லவே இல்லை (வச.7). அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, நான் பெற்ற சுதந்திரம், என் இஷ்டப்படி வாழ்வதற்கு அல்ல.... **எனக்கு சுதந்திரம் அருளித்தந்த 'கிறிஸ்து நாதருக்கே' என்னை அடிமையாக்கிக்கொண்டேன்** எனவும், கெம்பீரித்தார். 'விடுதலை சுவிசேஷத்தைப்' பெற்று அனுபவித்த அவரது தாசர்கள் எல்லோருமே, இந்த பவுலைப்போலவே "கிறிஸ்துவுக்கே தங்களை அடிமையாக ஒப்புக்கொடுத்து விட்டார்கள்". இனி நாமும்கூட, "கிறிஸ்து ஒருவருக்கே நாங்கள் அடிமை!" என்ற முரசொலி, இந்த பிரபஞ்சம் முழுவதற்கும் ஒலித்திடக்கடவது! (வச.10). ஆம், பாவ சங்கிலியோ, பாரம்பரிய சங்கிலியோ, சுயத்தின் சங்கிலியோ, எந்த மனுஷீக ஆளுகை சங்கிலியோ, இனி நம்மை அடிமைப்படுத்த முடியாது என்பதே, நம் சுதந்திர முரசொலி!

> "**கிறிஸ்து சிலுவையில் நமக்காக சம்பாதித்து வழங்கிய, ஆவிக்குரிய இந்த 'சுயாதீன' சுதந்திரத்தை உங்களிடமிருந்து பறித்துக் கொள்ள சிலர் உங்களிடத்தில் வந்தால், அவன் பிரகாசமான தூதனாயிருந்தால் கூட அவர்களை ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்றே புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம்!**

இவ்வாறு, நற்செய்தியை மீண்டும் அடிமைத்தன துர்ச்செய்தியாய் மாற்றி, கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற சுதந்திரத்தை பறிக்கத் துடிக்கும் எந்த மானிடனையும் ஏற்றுக்கொள்ளாதிருங்கள், அவர்களை புறக்கணித்துவிடுங்கள்! "**அது பவுலாகிய நானாக இருந்தாலும்**" **ஒரு பொருட்டல்ல!** என, மிகுந்த வைராக்கியத்தோடு கலாத்தியர் 1:9,10 வசனங்களில் கூறினார். இவ்வாறு கிறிஸ்துவினால் பெற்ற மேன்மையான சுதந்திரத்தை இழந்து, 'எந்த காரணத்திற்காகவோ' மனுஷர் பின்னால் போகிறவர்கள், கிறிஸ்துவின் நன்றியுள்ள அடிமைகளல்ல! என்பதை பவுல் உறுதிபட 10-ம் வசனத்தில் கூறினார். இவர்களே, மனுஷரைப் பிரியப்படுத்தி, மீண்டும் அடிமை விலங்கை பூட்டிக் கொள்ளும் பின்மாற்றக்காரர்கள்!

பவுல் தன்னையே ஒப்பிட்டுக் கூறி, முற்காலத்தில் பிரமாணங்களுக்கு அடிமையாயிருந்த நான், பிரமாணத்துவத்தை போற்றியவர்களை பிரியப்படுத்தும்படி, "சபையையும், சபையின் விசுவாசத்தையும் அழித்திட வகை தேடியவன்" என்ற முற்காலத்திலிருந்த தன் சொந்த நிலையை வருத்தமுடன் எழுதினார். மேலும், எந்த விசுவாசத்தை நான் அழித்திட வகை தேடினேனோ, இப்போது 'அந்த விசுவாசத்தையே' பிரசங்கிக்கிறவனாகினேன்!

*என்ற மாறுதலடைந்த தன் ஆசீர்வாத நிலையையும் கலாத்தியர் 1:23 வசனத்தில் தெரியப்படுத்தினார்!* **'முதலில்' செய்த தவறை, பின்பு உணர்வடைந்து மாறிய பவுல், நமக்கு ஓர் சிறந்த சாட்சி அல்லவா?**

*நியாயப்பிரமாண 'கட்டாயம்' என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, 'சுயாதீன சுதந்திரம்' என்ற கிறிஸ்துவின் 'அன்பின் பிரமாணத்திற்குள்' தான் பிரவேசித்து விட்டதை பவுல் மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவித்தார்: எப்படியெனில், "என்னோடேகூட இருந்த கிரேக்கனாகியதீத்துவை, விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளும்படி, நான் அவனை கட்டாயப்படுத்தவில்லை" என, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான 'சுயாதீன சுதந்திரத்தை' மிகுந்த மகிழ்ச்சியோடு செயலாற்றினார்! (கலா.2:3). அடிமைப்படுத்தும் குழுவிலுள்ளவர்கள், கிறிஸ்துவின் சுதந்திர உணர்வோடு வாழ்கிறவர்களை விரும்புவதில்லை! ஆகவே 'சுயாதீன கிறிஸ்தவர்களை' உளவுப்பார்த்து, அவர்களை எப்படியாவது திரும்பவும் "அடிமைத்தனத்திற்குள் கொண்டு வருவதற்கு" அதிகமாக பிரயாசப்படுகிறார்கள். அவர்களை குறிப்பிட்டு, "திருட்டுத்தனமாய் உள்ளே நுழைந்துவிட்ட கள்ள சகோதரர்கள்" என்றே பவுல் தேவ வைராக்கியத்தோடு எழுதினார் (கலா.2:4).*

> **"மேலும், சுவிசேஷம் வழங்கிய 'சுதந்திர சத்தியத்தில்' நாங்கள் உறுதியாய் இருந்தபடியால், "அவர்கள் எங்களைப் பலமுறை வற்புறுத்தியும் 'ஒரு மணி நேரம் கூட' அவர்களின் யாதொரு வற்புறுத்தலுக்கும் நாங்கள் கீழ்படிந்து இணங்கவில்லை!" என, ஜெயமாய் கிறிஸ்துவுக்குள் தான் பெற்ற சுதந்திரத்தை முரசு கொட்டினார்! (கலா.2:5).**

*அவ்வாறு பிரமாண அடிமை கட்டிற்குள் எங்களை மீண்டும் கொண்டுவர முயற்சித்தவர்களில் "பெரியவர்கள் என மதிக்கப்பட்ட நிலையில் இருந்தவர்களும்" இருந்தார்கள் என்பது உண்மைதான். 'அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தால் என்ன?' அதுகுறித்து எனக்கு கவலை இல்லை.* ***"தேவன் ஆளைப் பார்த்தா செயல்படுகிறார்?"*** *என்ற உறுதி உள்ளத்தோடு பவுல் கேள்விகளை சாரமாரியாக எழுப்பினார். அதுஏனென்றால் "தேவன் ஒரு மனுஷனிடத்திலும் பட்சபாதம் காட்டுபவர் அல்ல" என்ற சத்தியத்தில் பவுல் வேர் கொண்டிருந்த உறுதியே காரணமாகும்! ஆகவே,* ***கட்டாயப்படுத்தும் பிரமாணத்துவ சத்தியத்தை எதிர்த்து,*** *கிறிஸ்துவின் சுயாதீன சத்தியத்தை மனதார தழுவி 'சுதந்திர சுவாசம்' கொண்டவராய், பவுல் நம் எல்லோருக்கும் முன்னோடியாய் இருக்கிறார்!*

அப்போஸ்தலனாகிய பேதுரு, கிறிஸ்துவின் சுயாதீன பிரமாணம், நியாயப்பிரமாண அடிமைத்துவத்திலிருந்து மேலானது என அறிந்திருந்தும், 'அவ்வப்போது' நியாயப்பிரமாண அடிமைத்துவத்திற்கு 'விருத்தசேதனத்தினிமித்தம்' தடுமாற்றம் கொண்டவராய், "புறஜாதியாருடனே முதலாவது சாப்பிட்டான்! பின்பு, விருத்தசேதனமுள்ளவர்களுக்கு பயந்து, புறஜாதியாரிடமிருந்து விலகி பிரிந்தான்!" அவர்களுடைய மாயத்தைக் கண்ட பர்னபா கூட சற்று தடுமாறி இழுப்புண்டான்! இவ்வாறு, கிறிஸ்து சம்பாதித்து தந்த 'நேர் வழியில்' அவர்கள் நடவாதிருந்ததை பவுல் கண்டபோது, பேதுருவை எல்லோருக்கும் முன்பாக நேருக்கு நேராய் எதிர்த்தான்: "**ஏன் இந்த மாயம்?**" என கேட்ட அவர், புறஜாதியாரை, நியாயப்பிரமாண முறைமைக்கு "**நீர் எப்படி கட்டாயம் பண்ணலாம்?**" என, தன்னைவிட பன்மடங்கு மூத்த அப்போஸ்தலனாகிய பேதுருவை பார்த்து 'பாரபட்சம் இல்லாமல்' தைரியத்தோடு கேட்டார், கலாத்தியர் **2:11-14** வசனங்களை வாசியுங்கள். பேதுரு அப்போஸ்தலன் கிறிஸ்துவின் அன்பிற்குச் சொந்தமான மூத்த அப்போஸ்தலர்! ஆகிலும், தன்னைவிட இளமையான பவுலின் கடிந்து கொள்ளுதலை மனதார ஏற்றுக்கொண்டு, தன் 2பேதுரு **3:15,16** வசனங்களில் பவுலின் ஞானத்தை மெச்சிக்கொண்டார்!

**இயேசு முழங்கிய 'சுயாதீன' வெற்றி முரசு:**

1) பிரதான தூதர்களில் முதன்மையாயிருந்த 'லூசிபர்' தேவனுக்கு மேலாக உயர்ந்து, ஆளுகை செய்ய விரும்பினான்! அது வாய்க்காதபடியால் மூன்றில் ஒரு பங்கு தூதர்களை தனக்கென்று பிரித்துக் கொண்டுபோய், அவர்களை ஆளுகை செய்து மகிழ்ச்சி அடைந்தான். 'லூசிபரான' பிசாசின் இராஜ்ஜியத்தை அழிப்பதற்கே இயேசு வந்தார்!

> "வந்திருப்பவர் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று லூசிபர் அறிந்திருந்தபோதும் "அவரைகூட" முழங்காலிட்டு தன்னை வணங்கினால், என் வசம் இருக்கும் உலக இராஜ்ஜியத்தை உமக்குத் தருவேன்" என கூறினான் (லூக்கா 4:6,7).

"தேவகுமாரனை கூட, தன்னை அடிபணிந்து வணங்கிட" அவன் விடுத்த அழைப்பு, விநோதமாயிருக்கிறது. இந்த கடைசி நாட்களில் "கொஞ்சம் பணத்திற்காக அல்லது தனக்கு தரப்படும் பதவிக்காக" தேவனுடைய அன்பின் ஆளுகையை இழந்து 'அடிமைத்தனத்திற்குள்' வீழ்ந்தவர்கள் ஏராளம்! ஆனால் "உலக இராஜ்ஜியம் முழுவதையும்

*உனக்குத் தருவேன்"* என **அடிமைத்தனத்திற்கு விலைபேசியபோது,** *இயேசுவோ "எனக்கு பின்னாக போ சாத்தானே, தேவனாகிய கர்த்தர் ஒருவரே நான் பணிந்து வணங்கும் பாதபடி" என இயேசு வெற்றி முரசு ஒலித்தார்!*

*2) பிரதான ஆசாரியரின் தலைமையில் கூடிய ஆலோசனை சங்கத்தில், இயேசு ஒரு கைதியைபோல் நிறுத்தப்பட்டபோது, அவர்கள் அனைவரும் இயேசுவை கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் சாட்சி சொன்னார்கள். வேதம் கூறுகிறபடி, அவர்கள் கூறிய* **எல்லா விரோதமான சாட்சிகளும் "பொய் சாட்சி"** *என்றே தெளிவுப்படுத்துகிறது! (மாற்கு 14:55,56). அப்பொழுது பிரதான ஆசாரியன் நடுவே நின்று, ஆலோசனை சங்கத்தார் அனைவரும் அவருக்கு விரோதமாய் கூறியதைப் பற்றி இயேசுவிடம் விசாரித்தார். இயேசுவோ, பொய் சாட்சிகளை நியாயப்படுத்த மறுத்துவிட்டார்! ஆனால் மற்றொரு கேள்விக்கு "தனக்கு மரண தண்டனை உண்டாகும்" என இயேசு அறிந்தபோதும் "நான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதான்!" என தைரியமாய் அறிக்கை செய்து, ஆலோசனை சங்க தலைவனாய் இருந்த பிரதான ஆசாரியருக்கு, தலை வணங்க மறுத்து விட்டார் (மாற்கு 14:61,63,64).*

*3) பிலாத்துவின் ராஜ அரண்மனையில், இயேசுவுக்கு முகமுகமாய் நின்ற பொந்திபிலாத்து "உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டு! உன்னை விடுதலை பண்ணவும் எனக்கு அதிகாரம் உண்டு! இது உனக்கு தெரியாதா?" என பகிரங்கமாய் கேட்டான். இந்த இக்கட்டான நேரத்தில் "தான் விடுவிக்கப்படும் ஆசையை" இயேசு புறக்கணித்து* **"என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது,** *பரத்திலிருந்து மாத்திரமே எனக்கு அதிகாரமுண்டு!" என, இயேசு அந்த ராஜ அரண்மனை எதிரொலிக்க கூறி, அதிகார துவேஷத்திலிருந்த பிலாத்துவிற்கு அடிபணிய மறுத்துவிட்டார்! (யோவான் 19:10,11). தேவனுக்கும், அவருடைய அன்பின் பிரமாணத்திற்கும் தவிர, வேறு ஒருவருக்கும் சொற்ப லோக ஆதாயத்திற்காக 'அடிமையாய் மாறிட' மறுத்து நின்ற, நம் நல்ல இயேசுவின் அடிச்சுவடுகள், நம்மை விசுவாசத்தில் வீறுகொள்ளச் செய்வதாக!*

*'தேவனாகிய கர்த்தர் ஒருவர் தவிர' நான் எந்த மனுஷனுக்கும் அடிமை இல்லை! என்ற கிறிஸ்துவின் சுயாதீன முரசு, நம் ஜீவ காலமெல்லாம் ஒலிப்பதாக! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*



# “இருதயத்தில் கிறிஸ்து வேண்டும்” என, வாலிபர்களை அனல் மூட்டியவர்! “ஹென்றி ஸ்கோகல்”

நம் நாட்களில் மேற்கு வங்காளத்தின் கல்கத்தா நகரில் ‘நோபல் பரிசு’ பெற்ற அன்னை தெரசா அவர்களை நாம் யாவரும் அறிவோம். குப்பைத் தொட்டியில் வீசிடும் நிலையிலான எல்லா மனுஷர்களையும் அணைத்துக்கொண்ட அவரது கிறிஸ்தவ தொண்டிற்கும்! அவர்கள் வெளிப்படுத்திய “இறைவனுக்கு அழகுள்ளவை எவை?” என்பதை நிருபித்து வாழ்ந்ததற்கும்! அவர் பெற்ற நோபல் பரிசிற்கு முக்கிய காரணங்களாகும்! அன்னை தெரசா அவர்கள் “நாம் இறைவனை கண்டுகொள்வது அவசியம். ஆனால் கூக்குரலும் அமைதியில்லாத இடத்திலும் அவர் இருப்பது இல்லை. இயற்கையின் அழகாய் இருக்கும் மரங்கள், மலர்கள், புல்வெளிகள்.... ஆகிய அனைத்தும் அமைதியான இரவில்தான் வளருகிறது! நட்சத்திரங்களும், சூரியனும் அமைதியான விண்வெளியில் அழகாய் நகர்ந்து செல்கின்றன! உண்மைதான், தேவன் அமைதிக்கு நண்பன்! அமைதியான ஜெபத்தில் நாம் எவ்வளவு பெற்றுக்கொள்கிறோமோ அந்த அளவிற்குதான் நம் ஜீவியத்தின் துடிப்பு மலரும்!” என அன்னை தெரசா அம்மையார் 20-ம் நூற்றாண்டில் பேசியதை, மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே, ஹென்றி ஸ்கோகல் தன் வாழ்க்கையை அடிப்படையாய் கொண்டு கூறினார்! அவர் வாழ்ந்த காலம் 28-ஆண்டு குறுகிய காலமாய் இருந்தாலும், அவரது வேத மாணாக்கர்கள், அவர் எழுதிய “தேவனுடைய ஜீவன், மனுஷனுடைய ஆத்துமாவில் மாத்திரமே வாசம் செய்திட முடியும்” என்ற அவரது புத்தகத்தின் மூலமாய் மாபெரும் உயிர்மீட்சி பெற்றார்கள். 1650-ம் ஆண்டு ஸ்காட்லேண்டு தேசத்தில் பிறந்த ஹென்றி ஸ்கோகல், முதுகலைப்பட்டம் பெற்று, அன்று ஜான்வெஸ்லி நடத்தியதைப் போன்ற மாணவ சமுதாயத்தை பக்தி வாழ்விற்குள் நடத்தினார்! தன் வாழ்வின் கடைசி 3-வருடங்களை மிகத் தீவிரமாய் இயேசுவின் தியான வாழ்க்கையை பிரசங்கிப்பதிலும், சிறந்த ஆவிக்குரிய புத்தகங்களை எழுதுவதிலும் செலவழித்தார்! அந்த குறுகிய வலிமை கொண்ட ஆவிக்குரிய எழுச்சியின் காலத்திற்குப்பிறகு, 1678-ம் ஆண்டு, காசநோயினால் கர்த்தருடைய சந்திதானத்திற்கு ஜெயமாய் சென்றுவிட்டார்.

அவர் எழுதிய தியான புத்தகத்தில், மெய்யான ஆவிக்குரிய தன்மை “நம் ஆத்துமா தேவனோடு இணைவதுதான்” என உரைத்தார். மேலும், தெய்வீக சுபாவத்திற்கு வேராயிருப்பது விசுவாசம்! அதன் கிளைகளாய் இருப்பது தேவனிடத்தில் அன்புகூருவதும், மனுஷரிடத்தில் அன்புகூருவதுமேயாகும் என வலியுறுத்தினார்! நம் ஜீவிய பயணத்தில், தொடர்ச்சியாய் நம் இருதயங்களை தேவனுக்கு முன்பாக உயர்த்தி ஏறெடுப்போமாக! அதுபோன்ற சமயங்களில் “ஓ தேவனே, இவ்வுலகில் வேறெதைக் காட்டிலும் உம்மையே அதிகமாய் நேசிக்கிறேன்!” என அவரிடம் கூறுவோமாக! அவ்வாறு மனப்பூர்வமாய் உங்களால் கூறமுடியாவிட்டாலும் ‘அவ்வாறு கூறுவது நம்முடைய கடமை’ என உணர்ந்து, கடமைக்காவது கூறிட பழகுவோமாக! தேவனுக்கு செய்திடும் எந்த தியாகமும் பெரிதென்று எண்ணாதீர்கள். ஏனெனில், தேவன் தன்னுடைய சொந்த மகனின் இரத்தத்தை நம் ஆத்தும மீட்பிற்காக கொடுத்ததை ‘பெரிதென்று’ தன் கணக்கில் அவர் வைத்து கொண்டதில்லை! இதுபோன்ற எண்ணற்ற தீப்பொறி வாசகங்கள், அவர் நாட்களில் வாழ்ந்த வாலிபர்களை எழுச்சியுறச் செய்தது!

- நிருபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, மாய வாழ்வு அல்ல 'நித்தியமே' உன் மகிழ்ச்சியாகட்டும்!

நான் இப்போழுதுதானே வாலிபன், நான் கிழப்பருவத்தை எட்ட இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகளோ இருக்கின்றனவே! "கிழப்பருவம் வரும்போது மரணத்தை குறித்து யோசிக்கலாம்" என்று ஒரு வாலிபன் எண்ணுவது தவறு. கல்லறைத் தோட்டத்திலுள்ள கல்லறைகள் எல்லாம் கிழவர்கள், கிழவிகளின், கல்லறைகள் மாத்திரம் இருக்கவில்லையே! சிசு பருவம், பிள்ளை, வாலிபம், நடுத்தர பருவம், விருத்தாப்பியம் ஆகிய சகல நிலைகளிலும், மண்ணின் மாந்தர்கள் மரணத்தைச் சந்தித்து, புதைகுழிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனரே!

நமது பாக்கியமான நல் மரணத்தைக் குறித்து நமக்கு ஒரு வாஞ்சை இருப்பது தவறல்ல! ஆனால், "நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக, என் முடிவு நீதிமான் முடிவுபோல் இருப்பதாக" (எண் 23:10) என்று ஆவல் கொண்ட பிலேயாமின் ஆசை நிறைவேறாமற் போயிற்றே! உண்மை என்னவென்றால், நாம் அவனைப்போல ஆசை கொண்டு, தேவ பெலத்தால் அந்த பரலோக ஆசையை கட்டாயம் நிறைவு செய்து விடவேண்டும்!

தனது மரணப்படுக்கையிலிருந்த ஒரு கிறிஸ்தவ ஐசுவரியவான் மனிதரை நான் சந்தித்தேன். அவர் என்னைப் பார்த்து "முடிஞ்சிருச்சி எல்லாம் முடிஞ்சிருச்சி" என்ற வார்த்தைகளை மிகுந்த துக்கத்தோடு கூறி, ஓரிரு தினங்களில் இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றார்! தனது பரம தகப்பனுடைய வீட்டுக்கு ஆனந்த களிகூருதலோடு கடந்து செல்ல வேண்டிய அந்த மனிதர், முற்றும் நம்பிக்கையற்றவராக தனது நித்திய யாத்திரையை தொடங்க வேண்டியதாயிற்று! அதுவே, நமது வருத்தம். ஆனால் நமது ஓட்டமோ கர்த்தருக்குள் மிகுந்த நிச்சயத்தோடு ஓடி முடிக்கப்படவேண்டும். அப்போஸ்தலன் அதைக்குறித்து எழுதும்போது "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன், ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன்" (1கொரி 9:26) என்று குறிப்பிட்டார். ஆகவே வாலிபனே, ஓர் நிலையற்ற நிர்ப்பந்தமான நிலை நமக்கு வராமல், அன்பின் கர்த்தர் நம்மை காத்துக்கொள்ள, இந்தக் கிருபையின் நாட்களில் இயேசு இரட்சகரை அண்டி, நீடித்த நித்திய ஜீவனைப் பெற்று வாழ்வாயாக!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship
@indianbk